## தொழில் நகரமாம் இராணிப்பேட்டையில் – தொண்டால் பொழுதளக்கும் தூயவர் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உணர்ச்சிமிகு உரைகேட்கக் குழுமினர்காண் தமிழ்ப் பெருங்குடி மக்கள்!



### திறமையும் – மக்கள் நலனில் உண்மையான அக்கறையுமிருந்தால் – தடைகளை மீறியும் சாதிக்கலாம் என்பதற்கு

# நமது 'திராவிட மாடல்' அரசுதான் சிறந்த எடுத்துக்காட்டு!

## இராணிப்பேட்டை – தேர்தல் பிரச்சாரப் பிரம்மாண்டப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

ராணிப்பேட்டை, ஏப்.15 -

**கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13-04-2026) மாலை, இராணிப்பேட்டையில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றுகையில், " ஆட்சி நடத்தத் திறமையும் - மக்கள் நலனில் உண்மையான அக்கறையுமிருந்தால் - தடைகளை மீறியும் சாதிக்கலாம் என்பதற்கு நமது 'திராவிட மாடல்' அரசுதான் சிறந்த எடுத்துக்காட்டு!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**கழகத்தலைவர்-முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இராணுவப்பேட்டையாக இருந்த இராணிப்பேட்டைக்கு நான் வந்திருக்கிறேன். ஆற்காடு சீரக சம்பா பிரியாணி, மக்கன் பேடா என நவாப்களின் உணவு வகைகளுக்குப் பெயர் பெற்ற ஆற்காடு அமைந்திருக்கும் மாவட்டத்துக்கு வந்திருக்கிறேன். தக்கோலம், ஆற்காடு என்று நிறைய போர்களைப் பார்த்த மண், இந்த மண்! அப்படிப்பட்ட மண்ணில் இருந்து, 2026 ஜனநாயகப் போரில், டெல்லி அணியை வீழ்த்தி, தமிழ்நாடு அணி வெற்றி பெற உங்கள் ஆதரவைக் கேட்டு நான் வந்திருக்கிறேன்.

சாதாரணப் பகுதியா இது? ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணத்தின் முதல் நகராட்சியாக உருவாக்கப்பட்ட வாலாஜாபேட்டை இங்குதான் இருக்கிறது.

அதுமட்டுமா, தென்னிந்தியாவின் முதல் ரயில் சேவையும், சென்னை - ராயபுரத்தில் இருந்து அம்மூர் வாலாஜா சாலைக்குதான் விடப்பட்டது.

**சிறப்பான நமது ஆட்சி தொடர ஆதரவு தாரீர்!**

அண்ணல் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, இந்தியாவிலேயே ராணிப்பேட்டையில்தான் பதிமூன்றே நாளில் அவருக்குச் சிலை அமைக்கப்பட்டது!

சோளிங்கர் நரசிம்ம பெருமாள் திருக்கோயில், I.N.S. ராஜாளி கடற்படை விமானத் தளம், மகேந்திரவாடி, ஆற்காடு கோட்டை என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட ராணிப்பேட்டைக்கு, சிறப்பான ஆட்சி தொடர ஆதரவு கேட்டு நான் வந்திருக்கிறேன்.

தமிழ்நாட்டில் பாதி மாவட்டங்களை நான் கவர் பண்ணிவிட்டேன்! திராவிட மாடல் 2.0-வுக்கு எல்லாரும் 'OK' சொல்லிவிட்டார்கள்… ராணிப்பேட்டையும் ரெடியா? ('ரெடி என மக்கள் குரல்) நன்றி! இப்போது உங்கள் அனுமதியோடு நம்முடைய வெற்றி வேட்பாளர்களை இங்கே உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். அறிமுகமான ஆட்கள்தான், இருந்தாலும் மரபுப்படி அறிமுகப்படுத்தப் போகிறேன்.

முதலில், ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ஆர். காந்தி. நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த காந்தி, ஐந்தாண்டு காலம் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சராக இருந்து, சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்.



அடுத்து, ஆற்காடு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தம்பி ஈஸ்வரப்பன் அவர்கள். ஆற்காடு நகர்மன்றத் தலைவராக இருந்து, சட்டமன்ற உறுப்பினராக உயர்ந்தவர். சட்டமன்றத்தில் பேசும்போது, தனக்கென தனிபாணியில் பேசுபவர். எல்லாரும் ரசிக்கும்படியாக அவரின் பேச்சு இருக்கும். ஆற்காடு தொகுதிக்கு பல்வேறு வளர்ச்சிப் பணிகளைக் கொண்டு வந்திருக்கிறார். அவருக்கு, நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தர வேண்டும்.

அடுத்து, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஏ.எம். முனிரத்தினம் அவர்கள். முனிரத்தினம் அவர்கள், நீண்டகால அரசியல் பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரர். மாவட்ட காங்கிரஸ் தலைவராக இருந்தவர். சோளிங்கர் பேரூராட்சித் தலைவராக இருந்தவர். சோளிங்கர் மக்கள் மீண்டும் அவருக்கு 'கை' சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த எழில் கரோலின். முன்னாள் ஒன்றிய அமைச்சர் தலித் எழில்மலை அவர்களின் மகள். நம்முடைய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன் அவர்களால் வேட்பாளராக அடையாளம் காட்டப்பட்டிருப்பவர். உச்சநீதிமன்றம், பன்னாட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்கறிஞராக இருந்தவர், மக்கள் பணியாற்ற வந்திருக்கிறார். அவருக்கு, 'பானை' சின்னத்தில் நீங்கள் வாக்கினை வழங்கிட வேண்டும்.

நம்முடைய நான்கு வேட்பாளர்களின் வெற்றியும் உறுதியா? ('உறுதி' என மக்கள் பலத்த குரல்) நன்றி! வேட்பாளர்கள் உட்காரலாம். உங்களுக்கு சீட் இப்போதே கன்ஃபார்ம் ஆகிவிட்டது.

**இராணிப்பேட்டை மாவட்டத்தில் – கழக அரசின் வளர்ச்சிப் பணிகள்!**

இந்தியாவுக்கே மாடலாக அமைந்திருக்கும் சாதனைத் திட்டங்களையும், உங்கள் மாவட்டத்துக்கான வளர்ச்சிப் பணிகளையும் செய்து கொடுத்துவிட்டுதான் உங்கள் ஆதரவை உரிமையோடு கேட்க வந்திருக்கிறேன். அதில் முக்கியமான சிலவற்றை மட்டும் இப்போது நான் சொல்கிறேன்.

இராணிப்பேட்டை இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக 'அறிவுசார் மையம்' திறக்கப்பட்டிருக்கிறது. பல நூறு பேர் போட்டித் தேர்வுகளுக்கு இங்கு வந்து தயார் ஆகிறார்கள்.

**உங்களின் நீண்ட நாள் கோரிக்கையான, ஆற்காடு - ஆரணி புறவழிச்சாலை நிறைவேற்றப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.**

**பழுதடைந்த ஆற்காடு பேருந்து நிலையக் கட்டடம் அகற்றப்பட்டு, புதிதாக பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது.**

**ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் - வெள்ளகுளம், பென்னகர், வாழைப்பந்தல் உள்ளிட்ட பகுதிகளில் புதிதாக தடுப்பணைகள் கட்டப்பட்டிருக்கின்றன.**

**சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே, ஆற்காட்டில் இருந்து ராணிப்பேட்டை போவதற்கு மேம்பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது.**

**ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு இடங்களில், பூங்காக்கள், உடற்பயிற்சி மையங்கள், சாலை விரிவாக்கம், தெரு விளக்குகள், புதிய கால்வாய்கள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டிருக்கிறது.**

**ஆற்காடு தொகுதியில் நிறைய ஏரிகளைச் சீரமைத்திருக்கிறோம்.**

**இராணிப்பேட்டை மற்றும் சோளிங்கரில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது.**

**இராணிப்பேட்டையில் வாரச் சந்தை வணிக வளாகம் கட்டப்பட்டிருக்கிறது.**

**மேல்விஷாரத்தில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்.**

**வாலாஜாப்பேட்டை - திமிரியில் புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது.**

**இராணிப்பேட்டையில் பணிபுரியும் பெண்களுக்கான தோழி மகளிர் விடுதியைத் திறந்து வைத்திருக்கிறேன்.**

**பேரூராட்சியாக இருந்த சோளிங்கர் நகராட்சியாகத் தரம் உயர்வு.**

**சோளிங்கர் புதிய பேருந்து நிலையப் பணிகள் நிறைவு பெற்றிருக்கிறது.**

**சோளிங்கர் மேல்வெங்கடாபுரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிய கட்டடம்.**

**பாலாறு அணைக்கட்டு 200 கோடி ரூபாயில் புனரமைக்கப்பட்டிருக்கிறது.**

**வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் கூடுதல் கட்டடம்.**

**மேல்பாக்கத்தில் பழங்குடியினருக்காக 41 குடியிருப்புகள் திறக்கப்பட்டிருக்கிறது.**

இவை எல்லாவற்றிற்கும் மேல், கடந்த பிப்ரவரி மாதம், பனப்பாக்கம் சிப்காட்டில், 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு தரும், டாடா மோட்டார்ஸ் ஜாகுவார் லேண்ட்-ரோவர் நவீன வாகன உற்பத்தி தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தேன். தொடங்கி மட்டுமா வைத்தேன்… அங்கு தயாரிக்கப்பட்ட முதல் 'ரேஞ்ச்ரோவர்' காரில், டாடா குழுமத் தலைவரைப் பக்கத்தில் உட்கார வைத்து, நானே கார் ஓட்டி இருக்கிறேன். அதையெல்லாம் பார்த்தீர்களா? இந்தத் தொழிற்சாலை வந்ததால், உலகமே இன்றைக்கு ராணிப்பேட்டையை உற்று நோக்கத் தொடங்கியிருக்கிறது.

> **என்னுடைய விசுவாசம் என்றைக்குமே**
>
> **தமிழ்நாட்டு மக்களுக்குதான்!**
>
> **ஒன்றிய அரசின் 2 ஆயிரம் கோடி ரூபாய் கல்வி நிதி வேண்டும் என்றால், இந்தியைப் படித்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். 2 ஆயிரம் கோடிக்காக தமிழர்களின் சுயமரியாதையை அடமானம் வைக்க, நான் ஒன்றும் காலில் விழுந்து பதவி வாங்கிய பழனிசாமி இல்லை; மிசாவுக்கே அசராமல் எதிர்த்து நின்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! மிசாவுக்கே பயப்படாதவன், அமித்ஷாவுக்கா பயப்படு-வேன்! நான் மக்களைச் சந்தித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர். அதனால், என்னுடைய விசுவாசம் என்றைக்குமே தமிழ்நாட்டு மக்களுக்குதான்!**

அதுமட்டுமா, பனப்பாக்கம் சிப்காட்டில் 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் தைவான் கம்பெனியின் காலணி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினேன். இதில் ஒரு சிறப்பம்சம் என்ன என்றால், 85 விழுக்காடு கிராமப்புறப் பெண்களுக்குதான் இங்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் போகிறது.

**இராணிப்பேட்டை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பார்த்துப் பார்த்து செய்த திட்டங்கள்!**

இப்படி, ராணிப்பேட்டையின் தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, உட்கட்டமைப்பு வளர்ச்சிக்காக பார்த்து பார்த்து திட்டங்களைச் செய்து கொடுத்திருக்கிறோம்.

தொடர்ச்சி 8 –ஆம் பக்கம்